[2013 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 302, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

302—

கால்நடை கிளை நிலையம்

***21322—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, எஸ். அம்மாபட்டி ஊராட்சி, குப்பணாபுரத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, எஸ். அம்மாபட்டி சிற்றூராட்சியில், குப்பணாபுரத்திலே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். அங்கே அரசின் விதிமுறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினால், கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, குப்பணாபுரம் பகுதியில் அதிக அளவில் கால்நடை வளர்ப்போர் உள்ளனர். இந்தக் கிராமத்தில் செம்மறி ஆடுகள் 4,376, வெள்ளாடுகள் 1,814, கோழி இனங்கள் 600 மற்றும் கறவை மாடுகள் 316 ஆக மொத்தம் 7,106 கால்நடைகள் உள்ளன. கால்நடைகள் நோய்வாய்ப்படுகின்ற போதும், கால்நடைகளைக் கருத்தரிப்பதற்காகக் கொண்டு*

2013 ஏப்ரல் 23]

செல்லும்போதும் 12 கி.மீ. தூரம் உள்ள குன்னூர் கால்நடை மருத்துவமனைக்குத்தான் கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. இதனால், கால்நடை வளர்ப்போர் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, அந்தப் பகுதியில், கால்நடை வளர்ப்போருடைய எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், குப்பணாபுரம் கிராமத்தில் ஒரு புதிய கால்நடை கிளை நிலையம் அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திலே மீண்டும் கால்நடைத் துறையினர் ஆய்வு செய்து, அங்கு அனைத்தும் சரியான எண்ணிக்கையில் இருக்குமென்று சொன்னால், வரையாது வழங்குவதே வாழ்வின் இலட்சியம் என வாழ்ந்து கொண்டிருக்கின்ற அம்மாவுடைய அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அங்கு ஒரு கிளை நிலையத்தை வழங்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய எண்ண ஓட்டங்களைப் புரிந்து கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போரின் எண்ணிக்கையையும், மக்களுடைய எண்ணிக்கையையும், சூழ்நிலையையும் கருத்தில்கொண்டு, கால்நடை கிளை நிலையத்தை அமைத்துத் தரவேண்டும். இன்றுகூட அந்தப் பகுதியிலுள்ள கால்நடை மருத்துவத் தலைமை அதிகாரியிடம் கேட்கும்பொழுது, அதற்கான வாய்ப்பு இருக்கிறது, விதிமுறைகளிலும் இடமிருக்கிறது என்று கூறியிருக்கிறார். எனவே, அதையெல்லாம் பரிசீலனை செய்து, அந்தப் பகுதியில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறைமூலமாக மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்து, கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அங்கு ஒரு கால்நடை கிளை நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 303, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

303—

பேருந்து பணிமனை

***18355—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கயத்தாறு அல்லது கடம்பூர் பேரூராட்சி பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மண்டல தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையின் கிளை ஒன்று கோவில்பட்டியில் செயல்பட்டு வருகிறது. இப்பணிமனையானது, கயத்தாறு மற்றும் கடம்பூர் ஆகிய இரண்டு இடங்களிலிருந்தும் சுமார் 31 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளது. நடைமுறையிலுள்ள விதிகளின்படி இரண்டு பணிமனைகளுக்கு இடையேயான தூரம் 40 கி.மீ.-க்குமேல் இருக்க வேண்டும். எனவே, கயத்தாறு அல்லது கடம்பூரில் பணிமனை தற்போது அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.